# பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் கதையாடல்களில் அறநிலைச் சாட்சியமளித்தலும் கதை கூறுதலும்

## இலங்கையின் உள்நாட்டு யுத்தத்திலிருந்து

பேராசிரியர் மினோலி சல்கொட
அவர்களால்

17 ஒக்டோபர் 2025

மு.ப. 9.30 மணி - பி.ப. 1.00 மணி

ICES கேட்போர் கூடம், கொழும்பு 08

**வரையறுக்கப்பட்ட இடங்களே உள்ளன!**

**பதிவு செய்ய ஒக்டோபர் 12 இற்கு முன்னர் கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்**

பேராசிரியர் மினோலி சல்கொட அவர்களால் நடாத்தப்படும் பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் கதையாடல்களில் அறநிலைச் சாட்சியமளித்தலும் கதை கூறுதலும் தொடர்பான மூன்றரை மணித்தியால பயிற்சிநெறியில் கலந்துகொள்ளுமாறு உங்களை அழைக்கிறோம்.

ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள், உதவிப் பணியாளர்கள் மற்றும் கதைசொல்லிகளை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி, சாட்சியமளித்தல் மற்றும் சாட்சிகள்-தப்பிப்பிழைத்தவர்களிடமிருந்து அறநிலையான தகவல் சேகரித்தலும் அனுபவங்களை எழுதுதலும் தொடர்பான நெறிமுறைகளின் அடிப்படைகளை பங்கேற்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையானது விடய ஆய்வுகள், ஊடாடும் செயற்பாடுகள் மற்றும் எழுத்துப் பயிற்சிகள் மூலம் அறநிலை எழுத்து நடைமுறைகளையும், கேட்டல் மற்றும் கதை சொல்லும் திறன்களையும் வளர்க்க உதவும். சாட்சிகளாக இருந்து தப்பிப்பிழைத்தவர்களின் “உண்மையான” கதைகளை அறநிலை ரீதியாக பாரமுள்ள “உண்மையில்” நீடித்த அர்த்தத்தையும் தாக்கத்தையும் கொண்ட கதையாடல்களாக மாற்றுவது எப்படி என்பதை நாங்கள் ஒன்றாகக் கற்றுக்கொள்வோம்.

சாட்சியம் தொடர்பான ஆராய்ச்சியினையும் உடல்-உளக் காயங்கள் தொடர்பான ஆய்வுகளினதும் அடிப்படையாகக் கொண்ட இந்த நிகழ்ச்சி தப்பிப்பிழைத்தவர்களின் கதைகளை அடிப்படையாகக் கொண்ட ஊடாடும் செயற்பாடுகளை உள்ளடக்கியது. இந்த நிகழ்ச்சி ஆங்கிலத்தில் தமிழ் உரைபெயர்ப்புடன் நடத்தப்படும். தமிழ் பேசுபவர்களும் எழுத்தாளர்களும் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.



மினோலி சல்காடோ எழுத்தாளரும் மன்செஸ்டர் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தில் சர்வதேச எழுத்து தொடர்பான பேராசிரியரும் ஆவார்.

இலங்கையின் அரசியல் முரண்பாட்டில் கவனம் செலுத்தும் வகையில், பின் காலனித்துவ ஆய்வுகள், பண்பாட்டுக் கோட்பாடு, புலம்பெயர் இலக்கியம் மற்றும் சாட்சிய ஆய்வுகள் ஆகியவை தொடர்பான படைப்புக்களை அவர் பரவலாக எழுதி வெளியிட்டுள்ளார். ‘இலங்கை தொடர்பாக எழுதுதல்: இலக்கியம், எதிர்ப்பு மற்றும் இடத்தின் அரசியல்’ என்ற ஆய்வையும், ‘A Little Dust on the Eyes’ என்ற நாவலையும், ‘சாட்சி இலக்கியம்: பண்பாடு, நினைவு மற்றும் சவாலுக்குட்படுத்தப்படும் உண்மைகள்’ என்ற தனிவுரைவு நூலையும், ‘தாயகத்திலிருந்து பன்னிரண்டு கூக்குரல்கள்: இலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி’ என்ற புனைவல்லாத படைப்பையும் அவர் எழுதியுள்ளார்.